1978 செப்டம்பர் 12]

விவாதத்திற்கு உரியதாக நல்ல புனிதமான இடமாக உள்ள வள்ளுவர் கோட்டத்தை ஆக்குவது வள்ளுவருக்கும் சிறந்ததல்ல, நமக்கும் நன்மையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[பிற்பகல் 4.10]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வள்ளுவர் கோட்டத்திற்கு முன்னால் பேரறிஞர் அண்ணாவின் சிலை உள்ளது. சிலையின் பீடத்தில் வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கியவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சிலையின் பீடத்திலே அப்படி வாசகம் இருக்கிறது என்று உறுப்பினர் தெரிவித்த பிறகு, நாங்கள் போய்ப் பார்த்தால் தான் அது உண்மையா இல்லையா என்பது தெரியும். ஒருவேளை அப்படி இருந்தால், நான் என்ன பதில் தர முடியும் என்பதையும் உறுப்பினருடைய முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : வள்ளுவர் கோட்டத்தைத் தலைமைப் பீடமாகக் கொண்டு, திருக்குறள் ஆராய்ச்சி நடத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சரவர் கள் தெரிவித்தார்கள். அப்படி ஆராய்ச்சி நடத்தாவிட்டாலும் கூட விவிலியர் பிரச்சாரம் நடத்தியது போல, வள்ளுவர் கோட்டத்துக்கு முன்னால் திருக்குறளைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஒரு நாள் அல்ல, ஆண்டு முழுவதும் அப்படிச் செய்வதாக இருந்தாலும் கூட, எவ்வளவு நாள் ஆனாலும் கூட பரவாயில்லை, அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

Craft Teachers.

*72 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the special pay of rupees five paid to the Craft Teachers, who have acquired Secondary Grade qualification has been stopped for those who have been awarded Selection Grade Scales of Pay in Ramanathapuram District;

(*b*) if so, the reasons therefor, and

(*c*) the number of teachers affected ?

[1978 செப்டம்பர் 12

கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இடைநிலைத் தர தகுதியடைந்த கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஐந்து ரூபாய் சிறப்புச் சம்பளம், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்வு நிலை சம்பள வீதங்கள் வழங்கப்பட்டுள்ள அத்தகைய ஆசிரியர்களுக்கு, நிறுத்தப் பட்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) கைத்தொழிலாசிரியராக பணியாற்றியவர்கள் தேர்வு நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறும்போது தேர்வு நிலை சம்பள விகிதம் பெறுவதால் அவர்களுக்கு ஏற்கெனவே பெற்ற சிறப்பூதியம் ரூ. 5 / தொடர்ந்து கொடுக்க முடியாது என அரசு ஆணையிட்டுள்ளது.

(உ) எட்டு பேர் மட்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: கைவினைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற உடனே அவர்களுக்குச் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது. தேர்வு நிலை என்பது 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படு கிறது. இடைநிலை ஆசிரியர்களுடைய ஊதிய விகிதமும் கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுடைய ஊதிய விகிதமும் சமம். அந்தக் கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள் சிறப்பு ஊதியம் பெறக்கூடிய வகையில் மீண்டும் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இவர்கள் உயர்ந்த விகிதத்தில் ஊதியம் பெற்றுக்கொண்டிருப்பதால், சிறப்பூதியம் கொடுப்பதற்கில்லை.

H. K. R. H. College, Uthamapalayam

* 73 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of H.K.R.H. College, Uthamapalayam. Madurai district, have not been paid their salary arrears from December 1976 to May 1977 ;